# தமிழ் இணையப் பல்கலைக் கழகம்
# TAMIL VIRTUAL UNIVERSITY

## மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)
## நிலை - I (Grade - I)

## நேரடி எழுத்துத் தேர்வு (Offline Examination)

## மாதிரி வினாத்தாள் (Model Question Paper)

நேரம் : 2.30 மணி மதிப்பெண்: 75

### பகுதி - 'அ'

**I** எல்லா வினாக்களுக்கும் ஒருசொல் / தொடரில் விடை தருக
**Answer all questions in a word / line.** **10x1=10**

1. சத்திய ஞான சபை அமைத்தவர் யார்?
2. உலகப் பொதுமறை எது?
3. ஈசன் என்பது எக்கடவுளைக் குறிக்கும்?
4. விருந்தினரை வரவேற்ற குடும்பத் தலைவியின் முகம் எவ்வாறு இருந்தது?
5. தமிழ்மொழியில் உள்ள சிறப்பு எழுத்துகள் யாவை?
6. 'நஞ்சு' தேர்வில் எழுதிய உணவுப் பொருட்கள் யாவை?
7. படர்க்கை என்றால் என்ன?
8. வினைச்சொல்லின் வகைகள் யாவை?
9. உயிர்எழுத்து முன் மெய் எழுத்து வந்து சேர்வதற்கு எடுத்துக்காட்டுத் தருக.
10. உவமை அணி என்றால் என்ன?

### பகுதி - 'ஆ'

**II** எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.
**Answer any ten questions in three sentences each.** **10x2=20**

1. வள்ளலார் இறைவனை எவ்வாறு வணங்குகின்றார்?
2. யார் இல்லை என்றால் தனக்கு இன்பம் இல்லை என்று முடியரசன் கூறுகின்றார்?
3. திருவள்ளுவரின் நினைவுச் சின்னங்கள் குறித்து எழுதுக.
4. பழமொழி - சிறுகுறிப்பு வரைக.
5. திருமாலை ஆண்டாள் எவ்வாறு வணங்குகின்றார்?
6. உமறுப்புலவர் - சிறு குறிப்பு வரைக.
7. தூது இலக்கியம் என்றால் என்ன?
8. அபிராமியை வணங்கினால் என்னென்ன தருவாள்?
9. எத்தகைய மக்கள் வளமான பாரதத்தை அமைப்பார்கள்?
10. நஞ்சு உண்ட நாயக மூர்த்தி மருத்துவர் வீட்டில் நடந்து கொண்ட விதத்தைக் கூறுக.

11. மற்றவர்களுக்கு உதவி செய்யும் பண்பில் வாழைமரத்தை உவமைப்படுத்துக.
12. பதினாறுகால் மண்டபத்தை இடிக்கக் கூடாது என்பதற்கு ஆசிரியர் கூறிய காரணங்கள் யாவை?
13. மெய் எழுத்துகளின் வகைகள் யாவை? அவற்றை எழுதுக.
14. ஆகுபெயரில் முக்கியமானவற்றை எழுதுக.
15. யாப்பு என்றால் என்ன? மரபுக்கவிதையின் வகைகளைக் கூறுக.

## பகுதி - 'இ'

**III** எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக. (5x 4=20)
**Answer any five questions in Six sentences each.**

1. இயேசுவை வீரமாமுனிவர் எவ்வாறு போற்றுகின்றார்?
2. கிள்ளி வளவனின் வீரம் குறித்து எழுதுக.
3. வன்னிச் சிறுவனின் நம்பிக்கையை எடுத்துக்காட்டி எழுதுக.
4. வைணவக் காஞ்சி குறித்து எழுதுக.
5. தமிழ்மொழியின் பழமையை அறிவியல் வழியில் நிறுவுக.
6. முதல் எழுத்துகள் - சிறு குறிப்பு வரைக.
7. ஓர் எழுத்து ஒருசொல் என்றால் என்ன? விளக்குக.
8. வினையெச்சம் என்றால் என்ன?

**IV** ஏதேனும் ஒரு வினாவிற்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.
**Answer any one of the following questions in fifteen sentences. (1x10=10)**

1. நாமக்கல் கவிஞர் உலகை எவ்வாறு வாழ்த்துகின்றார்?
2. நட்பைக் குறித்து திருவள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
3. காஞ்சிபுரம் கோயில் நகரம் என்பதை நிறுவுக.

**V** ஏதேனும் ஒரு வினாவிற்கு மூன்று பக்க அளவில் கட்டுரை வரைக.
**Write an essay in three pages to any one of the questions. (1x15=15)**

1. வானம் நீலநிறமாகக் காட்சி அளிப்பது குறித்து ஒரு கட்டுரை வடிவில் விடை எழுதுக.
2. வாழைமரம் குறித்து ஒரு கட்டுரை வரைக.